# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## அரையாண்டுத்தேர்வு - கல்வியாண்டு 2004-2005

### தமிழ்மொழி

### வினாத்தாள் - பகுதி 1

ஆண்டு 6 நேரம்: 40 நிமிடங்கள்

18.12.2004

முப்பது வினாக்கள் இப்பகுதியில் இடம்பெறுகின்றன. எல்லா வினாக்களுக்கும் விடை அளிக்க வேண்டும். ஒவ்வொரு வினாவுக்கும் நான்கு விடைகள் தரப்படுகின்றன. மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து, கூடு இடப்பட்ட விடைத்தாளில், விடைக்கான இலக்கத்தின் மீது புள்ளடி இடவேண்டும்.

1. தமிழில் முதலெழுத்துகளின் எண்ணிக்கை
   1. 12 2. 18 3. 21 4. 30

2. முத்தமிழ் எனப்படுவது
   1. இயல், இசை, நாடகம் 2. செய்யுள், இசை, நாடகம் 3. கூத்து, நாடகம், பாட்டு 4. மொழி, கவிதை, நாடகம்

3. தமிழ்மொழிக்கு மட்டுமேயுரிய சிறப்பு ஒலியை உடைய எழுத்து
   1. ஸ 2. ஜ 3. ள 4. ழ

4. இன்று வாழும் மொழிகளில் தொன்மையானது
   1. சிங்களம் 2. ஆங்கிலம் 3. தமிழ் 4. மலையாளம்

5. தமிழில் உயிரெழுத்துகளின் எண்ணிக்கை
   1. 30 2. 18 3. 12 4. 247

6. எல்லாள மன்னனைச் சூழ்ச்சி செய்து கொன்ற சிங்களவன்
   1. பராக்கிரமபாகு 2. துட்டகெமுனு 3. பிக்கு 4. காகவனத்தீசன்

7. சூரத்தீசன் என்ற சிங்கள மன்னனை வென்ற இரு தமிழர்கள்
   1. சேனன், குத்திகன் 2. சீனன், குத்தியன், 3. எல்லாளன், கெமுன 4.சேரன், சோழன்

8. எல்லாள மன்னன் கட்டிய ‘பெலிவாவி’ யின் இன்றைய பெயர்
   1. இரணைமடு 2. கனகராயன்குளம் 3. அக்கராயன்குளம் 4.வவுனிக்குளம்

9. தமிழ் மன்னனான எல்லாளன் எத்தனை ஆண்டுகள் இலங்கையை ஆட்சி செய்தான்
   1. 70 2. 100 3. 44 4. 60

10. சிங்களவரின் வரலாற்றுநூல் எனப்படுவது எது?
    1. அரசவம்சம் 2. பிறவம்சம் 3. சிங்களவம்சம் 4. மகாவம்சம்

11. மயிர்நீப்பின் உயிர் வாழாத விலங்கு
    1. கம்பளி ஆடு 2. கவரிமான் 3. காட்டெருமை 4. கரடி

12. உயிரிலும் சிறந்தது என்று குறள் கூறும் பொருள்
    1. ஒழுக்கம் 2. விழுப்பம் 3. வழக்கம் 4. மழுக்கம்